MANALI
PETROCHEMICALS

# Manali Petrochemicals Limited

Regd. Office: SPIC House, 88, Mount Road, Guindy, Chennai - 600 032.
CIN: L24294TN1986PLC013087, Website: www.manalipetro.com
E-mail: companysecretary@manalipetro.com; Telefax: 044-22351098

## NOTICE OF POSTAL BALLOT

Notice is hereby given that approval of the shareholders for obtaining the consent of the Members for the Special Business (1) by way of a Special Resolution for increase in remuneration to Mr. Subash Chandra Bose, (DIN: 06586982), Whole-time Director (Works), (2) by way of Ordinary Resolution for approval of transactions with Tamilnadu Petroproducts Limited, a Related Party and (3) by way of Ordinary Resolution for Mr. Ashwin Chidambaram Muthiah (DIN: 00255679), Chairman to hold an office or place of profit in AMCHEM Speciality Chemicals Private Limited, Singapore, the Wholly Owned Subsidiary of the Company is being sought through Postal Ballot. Pursuant to Section 110 of the Companies Act, 2013 [the Act] and the applicable Rules, the Notice of Postal Ballot together with the Postal Ballot Form has been sent in electronic mode to Members whose e-mail IDs are registered with the Company or the Depository participant(s). Physical copy of the Notice and Postal Ballot Form together with a Self Addressed Postage Prepaid envelope has been sent to all the other Members at their registered addresses through the permitted mode. The electronic transmission/physical dispatch of Notice to all the shareholders whose names appear in the Register of Members/List of Beneficial Owners on 30th March 2019 [Cut-Off Date] has been completed on 6th April 2019 as aforesaid. The Notice and the Postal Ballot Form is also available in the Company's Website. Members, who have not received the Notice and those who have received the Notice through e-mail but wish to exercise their vote in physical form, may download the same from the website of the Company or may request for a copy of the same by writing to the Registrars and Share Transfer Agent (RTA), Cameo Corporate Services Limited, Subramanian Building, 1 Club House Road, Chennai - 600 002, Email:investor@cameoindia.com.

Pursuant to Section 108 of the Companies Act 2013 and the relevant Rules, and Regulation 44 of the SEBI (Listing Obligations & Disclosure Requirements) Rules 2015, the Company has entered into an agreement with Central Depository Services (India) Limited [CDSL] to facilitate the Members to exercise their right to vote on the Postal Ballot by electronic means. The detailed process for participating in the e-voting is available in the notice of the meeting. Members of the Company holding shares in either physical or dematerialized form as on 30th March 2019 being the Cut-Off date may cast their vote electronically or through Postal Ballot. The Notice and the Postal Ballot Form is also available in the Websites of the Company and CDSL.

Subject to the restrictions under the Act and the other applicable regulations, persons who are entered as Members in the Register of Members or in the Register of Beneficial Owners by the Depositories as on the Cut-off Date alone shall be entitled to exercise the voting rights either by e-voting or through Postal Ballot.

The e-voting period commences on Monday, the 8th April 2018 at 9.00 AM and will end on Tuesday, the 7th May 2019 at 5.00 PM. The e-voting module shall be disabled thereafter and not available for voting. If a Member who has exercised e-voting also votes through the physical Postal Ballot Form, the voting by electronic means alone will be considered and the voting by physical ballot form will be disregarded. Members opting to vote physically may send the Postal Ballot Form duly filled in and signed and send the same so as to reach the Scrutinizers on or before 5.00 PM on 7th May 2019. Postal Ballot Form received after the said date and time will not be valid.

The results of voting would be declared as stipulated under the relevant Rules and will also be posted on the Websites of the Company and CDSL. The results will be informed to the Stock Exchanges as stipulated under the relevant Regulations.

For any queries or issues regarding e-voting, please refer to the Frequently Asked Questions ("FAQs") and e-voting manual available at www.evotingindia.co.in under help section or write an email to helpdesk.evoting@cdslindia.com In case of difficulties Members may also contact the undersigned or the RTA by e-mail / post / courier.

**By Order of the Board**
**For Manali Petrochemicals Limited**
R. Kothandaraman
***Company Secretary***

Place: Chennai
Date : 06.04.2019

MANALI PETROCHEMICALS

# மணலி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: ஸ்பிக் ஹவுஸ், 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை-600 032.
CIN: L24294TN1986PLC013087, Website: www.manalipetro.com
E-mail: companysecretary@manalipetro.com; Telefax: 044-22351098

## தபால் ஓட்டுக்கான அறிவிப்பு

1. திரு. சுபாஷ் சந்திரபோஸ் (DIN: 06586982) முழுநேர இயக்குனர் அவர்களுக்கு 01.04.2019 முதல் ஊதிய உயர்வு, 2. தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் லிமிடெட்டுடன் 2019-20 ஆண்டில் பரிவர்த்தனைகளுக்கு, மற்றும் 3. நிறுவனத்தின் துணை நிறுவனமான ஆம்கெம் ஸ்பெஷாலிடி கெமிகல்ஸ் பி லிட் சிங்கப்பூரில் திரு. அஸ்வின் சிதம்பரம் முத்தையா (DIN: 00255679), நிறுவனத் தலைவர் அவர்கள் ஊதியம் நல்கும் பதவி வகிக்கவும் பங்குதாரர்களின் ஒப்புதல் தபால் ஓட்டு மூலமாக கோரப்படுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 110 மற்றும் இதர தொடர்புடைய விதிகளின்படி, இதற்கான அறிவிக்கையும், தபால் ஓட்டுப் படிவமும் மின்னஞ்சல் மூலம் கம்பெனி அல்லது டெபாசிட்டரி பார்டிசிபேண்ட்ஸ்-யிடம் அம்முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏனையோருக்கு, இவை ஒரு சுயமுகவரியிட்ட, வணிகப் பதிலுறையுடன் அவர்தம் பதிவு பெற்ற முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. 30.03.2019 தேதியன்று (கட் ஆப் தேதி) உறுப்பினர்கள் பதிவேடு/பயனாளிகள் பட்டியலில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் மேற்படி அறிவிப்பினை அனுப்புதல் 06.04.2019 அன்று முடிக்கப்பட்டுள்ளது. அறிவிப்பினைப் பெறாத உறுப்பினர்கள் மற்றும் மின்னஞ்சல் மூலம் அறிவிப்பினைப் பெற்று ஆனால் தபால் வாக்குப் படிவம் மூலம் தம் வாக்குகளை செலுத்த விரும்பும் பங்குதாரர்கள் படிவினை நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது நிறுவனத்தின் பதிவாளர்கள் மற்றும் பங்குப் பரிமாற்ற முகவர்கள், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சுப்ரமணியம் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002, மின்னஞ்சல் முகவரி: investor@cameoindia.com என்ற முகவரிக்கு வேண்டுகோள் அனுப்பி நகலைப் பெற்றுக் கொள்ளலாம்.

நிறுவனம், கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் அதன் தொடர்பான விதிகள், செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டுத் தேவைகள்) ஒழுங்கு முறைகள் 2015, கூறு 44ன்படி, உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் ஓட்டளிக்கத் தேவையான வசதியை அளிப்பதற்காக சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டுடன் (CDSL) ஓர் ஏற்பாட்டினைச் செய்துள்ளது. தபால் ஓட்டு அறிவிப்பில் மின்னணு வாக்குப்பதிவில் பங்கேற்பதற்கான விரிவான செயல்முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கட் ஆப் தேதியான 30.03.2019 அன்று நிறுவனத்தின் உறுப்பினராக உள்ளோர் மட்டுமே கம்பெனிகள் சட்டம் மற்றும் இதர ஒழுங்கு முறைகளில் உள்ள கட்டுப்பாடுகளுக்குட்பட்டு மின்னணு முறையில் அல்லது தபால் ஓட்டு மூலம் வாக்களிக்கலாம். தபால் ஓட்டு அறிவிப்பு மற்றும் தபால் ஓட்டு படிவம் ஆகியவை கம்பெனி மற்றும் CDSLன் இணையதளங்களில் உள்ளன.

மின்னணு வாக்குப்பதிவு திங்கட்கிழமை 08.04.2019 அன்று காலை 9.00 மணிக்குத் தொடங்கி செவ்வாய்க்கிழமை 07.05.2019 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. அதன்பின்னர் மின்னணு வாக்குப்பதிவு வசதி இருக்காது. மின்னணு முறையில் வாக்களித்த உறுப்பினர், தபால் ஓட்டுப் படிவம் மூலமும் வாக்குப்பதிவைச் செய்திருந்தால் மின்னணு வாக்கு மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். தபால் ஓட்டு நிராகரிக்கப்படும். தபால் வாக்குச் சீட்டின் மூலம் ஓட்டளிக்க விரும்பும் உறுப்பினர்கள் தபால் ஓட்டுப் படிவத்தை முறையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு ஆராய்வாளர்களுக்கு 07.05.2019 அன்று மாலை 5.00 மணிக்குள்ளோ, அல்லது அதற்கு முன்னரோ வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் வரும் தபால் ஓட்டுப் படிவம் நிராகரிக்கப்படும்.

வாக்கெடுப்பின் முடிவுகள், அவை தொடர்பான விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வகையில் அறிவிக்கப்படும். மேலும் முடிவுகளின் விவரங்கள் கம்பெனி மற்றும் CDSL இணையதளங்களில் வெளியிடப்படுவதோடு, விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வகையில் பங்குச் சந்தைகளுக்கும் அறிவிக்கப்படும்.

மின்னணு வாக்களிப்பு மீதான விளக்கம் பெற, உறுப்பினர்கள் CDSL இணையதளம் www.evotingindia.comல் உள்ள கையேட்டையோ அல்லது சந்தேக விளக்க வினா-விடைகளையோ பார்க்கலாம், அல்லது helpdesk.evoting@cdslindia.com-க்கு மின்னஞ்சல் அனுப்பலாம். இதில் வேறு ஏதேனும் சிரமங்கள் இருப்பின் கேமியோ நிறுவனத்தையோ அல்லது கீழ்க்காணும் நபரையோ தொடர்பு கொள்ளலாம்.

**இயக்குனர் குழுவின் ஆணைப்படி**
**மணலி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட்டுக்காக**

இடம்: சென்னை

இரா. கோதண்டராமன்

தேதி: 06.04.2019

**கம்பெனி செயலாளர்**